பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 07 2024 **WEDNESDAY** 6 30 **PM**

தலைப்புச் செய்திகள்

1. இளநிலை மருத்துவ படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு முறையை ரத்து செய்யும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை என்று மத்திய அரசு கூறியுள்ளது.
2. மத்திய பட்ஜெட், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்யும் என்று சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் தெரிவித்துள்ளார்.
3. இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.
4. தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 16 லட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
5. 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா மகளிர் பிரிவில் 5 தங்கம் உட்பட 9 பதக்கங்களை வென்றது.

>>>><<<<

இளநிலை மருத்துவப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு முறையை ரத்து செய்யும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை என்று மத்திய கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் **Sukanda Majumdar** கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது அவர் இதனை தெரிவித்தார்.

நடப்பாண்டிற்கான **UGC** தகுதித் தேர்வு அடுத்த மாதம் 21ஆம் தேதி தொடங்கி, செப்டம்பர் மாதம் 4ஆம் தேதிவரை நடைபெறும் என்றும் மத்திய இணையமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

நாட்டின் ஜனநாயக கட்டமைப்பை பலவீனப்படுத்தும் வகையிலும், சமூகத்தில் பிளவை ஏற்படுத்தும் வகையிலும் தவறான செய்திகள் பரப்பப்படுவதை தடுக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், போலி செய்திகள் பரப்பப்படுவதை தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதற்கென ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

>>>><<<<

பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த, பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், பால் உற்பத்தியை பொறுத்தவரை உலக அளவில் இந்தியாவின் பங்களிப்பு 25 சதவீதமாக உள்ளது என்று குறிப்பிட்டார். பால் வளத்துறை ஆண்டுக்கு 6 சதவீத வளர்ச்சியை கண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

மத்திய பட்ஜெட், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்யும் என்று சட்ட அமைச்சர் திரு. அர்ஜூன் ராம் மெஹ்வால் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இணைய கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான இலக்குகளை எட்டுவதற்கு இந்த பட்ஜெட் அடித்தளமாக உள்ளது என்றும் திரு. அர்ஜூன் ராம் மெஹ்வால் தெரிவித்தார்.

>>>><<<<

மத்திய பட்ஜெட்டில் பழங்குடியினர் நலத்துறைக்கான நிதி ஒதுக்கீடு 73 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. **Jual Oram** தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதற்காக பிரதமருக்கும், நிதியமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

பழங்குடியினரின் சமூக பொருளாதார மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதை இது உணர்த்தியுள்ளதாகவும் அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

மத்திய அரசின் நடப்பு நிதியாண்டுக்கான பட்ஜெட், ஏழை, இளையோர், மகளிர், விவசாயிகள் என அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த பட்ஜெட்டில் தமிழகத்தின் பெயர் இடம்பெறவில்லை என்று கூறி, மாநில முதல்வர்கள் பங்கேற்கும் நித்தி ஆயோக் கூட்டத்தை புறக்கணிக்கப் போவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளது, நகைப்புக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ள பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மாநிலங்களை தவிர இதர மாநிலங்களுக்கு, நலத்திட்டங்கள் கிடைக்கப் பெறாது என்ற தோற்றத்தை ஏற்படுத்த முதலமைச்சர் முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மத்தியில் திமுக அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் தாக்கல் செய்த ஆறு நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தின் பெயர் இடம்பெறவில்லை, இதன் காரணமாக அப்போதைய மத்திய அரசு தமிழகத்திற்கான திட்டத்தை வழங்கவில்லை என்று முதலமைச்சர் கூறுவாரா என்றும் அவர் வினவியுள்ளார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தமிழகத்திற்கு கடந்த பத்தாண்டுகளில் 1 லட்சத்து 5 ஆயிரத்து 150 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களை வழங்கியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

திமுக – காங்கிரஸ் கூட்டணி அரசு ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலகட்டத்தில் 8 ஆயிரத்து 54 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள்தான் தமிழகத்திற்கு வழங்கப்பட்டதாக திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

>>>><<<<

தஞ்சாவூர் புத்தகத் திருவிழாவில் மத்திய அரசின் புத்தக வெளியீட்டுப் பிரிவு சார்பில் அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கில், நாட்டின் வரலாறு, தேசியத் தலைவர்களின் வரலாறு உள்ளிட்ட ஏராளமான தலைப்புகளில் புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக புதுதில்லி புத்தக வெளியீட்டுப் பிரிவின் துணை இயக்குநர் திரு. சிதம்பரநாதன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார். நடப்பாண்டில் இதுவரை 250 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு, இலங்கை சிறையில் உள்ள 87 மீனவர்கள் மற்றும் 175 படகுகளை விடுவிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை மாணவர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வேலூர் மாவட்டம், சேர்காட்டில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் புதிய கட்டிடத்தை இன்று திறந்து வைத்து அவர் உரையாற்றினார்.

கல்வியை பொதுப் பட்டியலிலிருந்து மாநில பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய உயர் கல்வித்துறை அமைச்சர் திரு. பொன்முடி, புதுமைப்பெண் திட்டத்தின் கீழ், கடந்த கல்வியாண்டில் மட்டும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பயனடைந்துள்ளதாக தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 16 லட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக உணவு அமைச்சர் திரு. சக்கரபாணி கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் முடிவடைந்த மாநில அரசின் திட்டப் பணிகளை திறந்து வைத்து அவர் பேசினார்.

குடும்ப அட்டை கோரி விண்ணப்பம் செய்பவர்களில் தகுதியானவர்களுக்கு அவை வழங்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். குடிசையில்லா மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மாநில அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு. சக்கரபாணி கூறினார்.

>>>><<<<

நபார்டு வங்கியில் வட்டியில்லா கடன் பெறும் விவசாயிகளை இயற்கை உரம் வாங்கும்படி நிர்பந்திக்கக்கூடாது என உத்தரவிடக் கோரிய வழக்கில் மத்திய – மாநில அரசுகள் பதிலளிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பான மனுவை விசாரணை செய்த பொறுப்பு தலைமை நீதிபதி திரு. கிருஷ்ணகுமார், நீதிபதி திரு. குமரேஷ்பாபு அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

இவ்வழக்கின் விசாரணை 3 வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், முதலாம் ஆண்டு வகுப்பினை மாநில அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி இன்று தொடங்கி வைத்தார்.

>>>><<<<

பெரம்பலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட ஊராட்சிப் பகுதிகளில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமினை ஆட்சியர் திருமதி. கிரேஸ் பச்சாவ் ஆய்வு செய்தார்.

>>>><<<<

திருப்பத்தூர் மாவட்டம், நிம்மியம்பட்டு ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஆட்சியர் திரு. தர்பகராஜ் இன்று கள ஆய்வு கொண்டார்.

>>>><<<<

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ஆட்சியர் திருமதி. அழகு மீனா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா மகளிர் பிரிவில் 5 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் 55 கிலோ எடைப்பிரிவில் **Dhanshri Fand-**ம், 57 கிலோ எடைப்பிரிவில் **Tapsya-**வும், 62 கிலோ எடைப்பிரிவில் **Nitika-**வும், 68 கிலோ எடைப்பிரிவில் **Shiristi-**யும், 76 கிலோ எடைப்பிரிவில் **Jothi Berwal-**ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

50 கிலோ எடைப்பிரிவில் **Muskan-**ம், 53 கிலோ எடைப்பிரிவில் **Kriti-**ம், 65 கிலோ எடைப்பிரிவில் **Sarika-**வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

72 கிலோ எடைப்பிரிவில் **Amruta Pujari** வெண்கலப்பதக்கம் வென்றார்.
இப்போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் இந்தியா வென்றது.

>>>><<<<

**Crunchlabs Masters Chess** போட்டியில் இந்தியாவின் **Arjun Erigaisi** பட்டம் வென்றார்.
ஆன்லைன் மூலம் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிச் சுற்றில் அவர், ரஷ்யாவின் **Evgeny Alekseeve-**யை வென்றார்.

>>>>END<<<<